Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி என் 49

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 8 ஆம் நாள் ஷவ்வால் பிறை 16 (19-2-65) வெள்ளிக்கிழமை இதழ் 1

இந்திய லோகசபையில்

# மொழிப் பிரச்னை மீது காரசாரமான விவாதம்!

## 14 வீடுகள் தீக்கிரை: புத்தளத்தில் சம்பவம்

கொழும்பு, வியாழன்

**புத்தளம் பகுதியிலுள்ள உடப்பு என்னுமிடத்தில் இன்று ஏற்பட்ட தீவிபத்தில் 14 வீடுகள் எரிந்து சாம்பலாயின!**

தீ விபத்துக்குள்ளான இந்த வீடுகளில் திகமானவை, மீனவர்களுக்குச் சொந்தமானவை என அறிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஒரு வீட்டின் சமையலறையில் ஏற்பட்ட தீவிபத்து, பின்னர் பல பகுதிகளுக்கும் பரவி இந்தச் சம்பவம் நிகழ்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது. நான்கு பக்கங்களுக்கும் தீ பரவியதற்குக் காரணம் அப்பொழுது வீசிய கடும் காற்று என்று சொல்லப்படுகிறது. பாதிக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது அரசாங்க பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். சேதவிபரம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

## 'ஹிந்தி பேசாத மக்களின் அச்சத்தை உடன் நீக்குக'

### இந்திய அரசாங்கத்துக்கு இ. தொ. கா. கோரிக்கை

கொழும்பு, வியாழன்

"உத்தியோகமொழி காரணமாக உணர்ச்சிவசப்பட்ட மக்கள் தென் இந்தியாவிலும் பிரதானமாக தமிழ்நாட்டிலும் அண்மையில் நடாத்தியகோரச் சம்பவங்கள் மூலம் பொருள்களுக்கும் உயிருக்கும் ஏற்பட்ட இழிவுகள் இந்தியா பெரிதும் பேணிப் பெற்ற சுதந்திரத்தை அபாயத்திற்குள்ளாக்கிவிட்டது. இந்த நிலையை நாம் மிகவும் கவலையுடன் நோக்க வேண்டியுள்ளது" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

முன்னர் குறிக்கப்பட்ட பிரகாரம் மொழிப்பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்றும் மத்திய அரசாங்கம் அண்மையில் நடந்துகொண்ட விதம் சரியானதல்லவென்றும், ஆகவே நாட்டில் சமாதானமும் தேசிய ஒற்றுமையும் நிலவவும் ஹிந்தி மொழி பேசாத மக்களின் பயத்தை நீக்கவும் இந்தியாவில் உள்ள சகல அரசியல் தலைவர்களும் மற்றும் இயக்கங்களும் தங்களது ஒன்று சேர்ந்த நல்லெண்ணத்தை உபயோகித்து நாட்டில் சமூக, பொருளாதார கலாசார முன்னேற்றத்தை நிலைநாட்ட வேண்டும் என்றும் இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் அந்த அறிக்கையில் கேட்டுள்ளது.

## மல்லி தட்டுப்பாடு பதுக்கலே காரணம்?

யாழ்ப்பாணம், பெப். 18

**யாழ்ப்பாணத்திலும், இதரவடபகுதி நகரங்களிலும் மல்லிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலும், இதர உபநகரங்களிலும் 1 ருத்தல் கொத்தமல்லி ரூபா 1-40-க்கு விற்கப்படுகிறது.**

உபஉணவுப் பொருட்களில் ஒன்றான மல்லிக்குத் தட்டுப்பாடு எதுவும் கிடையாதென்றும், செயற்கைத் [illegible] பாடே காரணம் என்றும்

(6-ம் பக்கம் பார்க்க)

## "ஹிந்தியை ஒருபொழுதும் ஆட்சிமொழியாக்க முடியாது"

— மனோகரன்

## தென்னாட்டு மக்களின் துயருக்கு அரசாங்கத்தின் அகம்பாவமே காரணம் என்கிறார் முகர்ஜி

புதுடில்லி, பெப். 18

**இந்தியாவின் மொழிப்பிரச்னை சம்பந்தமாக இந்திய லோக சபையில் இன்று மாலை அவசர பிரேரணையொன்று கொண்டு வரப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கிரேன் முகர்ஜி தாக்கல் செய்த இப்பிரேரணை இன்று மாலை 4 மணிக்கு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது அங்கத்தவர்களிடையே காரசாரமான முறையில் விவாதம் இடம் பெற்றது. இந்தியாவின் ஆட்சி மொழியினால் ஏற்பட்ட கிளர்ச்சிகளையும் அதன் விளைவாக ஏற்பட்ட உயிர், பொருள் சேதங்களையும் பற்றி குறிப்பிட்ட பல அங்கத்தவர்கள், அரசாங்கத்தின் மொழிக் கொள்கை பற்றி சொல்மாரி பொழிந்தனர்.**

"ஒரு பகுதி மக்களிடையே ஏற்பட்ட சோக சம்பவங்களுக்கு, அரசாங்கத்தின் அகம்பாவமே முக்கிய காரணம்" என்று சில அங்கத்தவர்களும் தமிழ் நாடு அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதென்று" வேறு சில அங்கத்தினர்களும் குற்றம் சுமத்தினர். லோக சபையில் நடைபெற்ற இந்த விவாதத்தில் கலந்து கொண்ட 10-க்கும் அதிகமான உறுப்பினர்கள் பல தடவைகளில் உணர்ச்சி வசப்பட்டு உரை நிகழ்த்தினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கிரேன் முகர்ஜி, பிரேரணையைத் தாககல் செய்து பேசுகையில், அரசாங்கத்தின் உத்தியோக மொழிக் கொள்கை காரணமாக நாட்டின் ஒரு பகுதியில் சொல்லொணா துயரச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றும் மொழிப் பிரச்னையால் ஏற்பட்ட உயிர்ச் சேதத்துக்கு அரசாங்கமே பொறுப்பு என்றும் கூறினார்.

தென்னாட்டிலும் மற்றும் சில பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் துயர வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருக்கையில் பலர் அதை பார்த்துக் கொண்டிருந்தது, அரசாங்கத்தின் அகம்பாவக் கொள்கையையே காட்டுகிறது" என்றும் திரு. முகர்ஜி குறிப்பிட்டார்.

காரசாரமான முறையில் அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்த திரு. முகர்ஜி சில உருப்படியான யோசனைகளையும் கூறினார்.

"மத்திய அரசாங்கம், நாட்டின் சகல தேசிய மொழிகளுக்கும் ஊக்கம் அளிக்க வேண்டும். மொழியை பொறுத்தவரையில் சகல மொழிகளின் வளர்ச்சிக்கும் அரசாங்கம் வசதி செய்யவேண்டும். அகில இந்திய தேர்வுகள் யாவும் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)



நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா சுப்ரீம்கோர்ட் விசாரணைக்கு முன் நேற்று முன்தினம் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில், உள்ளமுருகப் பிரார்த்தனையில்ஈடுபட்டிருந்த காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றைய சிந்தனைக்கு**

தெய்வக் கட்டளைக்கு இணங்க வாழ்வதன் மூலம் தான் பூரண தேககக மடைய முடியும். பூரண தேககசமின்றி உண்மையான இன்பமடைய முடியாது. நாசகு ருசியைக் கண்டிப்பாகக் கட்டுப் படுத்துவதன் மூலமே எல்லாப் புலன்களையும் வெல்லவும் அதன் மூலம் உலகை வென்று தெய்வத்தின் ஓர் அம்சமாகவும் திகழ முடியும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 8 உ (19-2-65)


## ஆங்கிலப்பேச்சுக்கு ஆட்சேபம்

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பார்லிமெண்டின் இருசபைக் கூட்டத்திலே ஆங்கிலத்தில் பேசியுள்ளார். இதை ஆட்சேபித்து சம்யுக்த (ஐக்கிய) சோஷலிஸட் கட்சி, ஜனசங்கம் இவ்விரு கட்சிகளையும் சேர்ந்த 35 மெம்பர்கள், அக்கூட்டத்தைப் பகிஷ்கரித்திருக்கிறார்கள். ஆங்கிலம் துணைமொழியாக நீடிக்குமென்று ஒருபுறம் ஜனாதிபதி கூறுகையில் மறுபுறம் இருகட்சியினர் ஆங்கிலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது ஒரு பெரிய எச்சரிக்கையாகும்.

ஜனாதிபதிக்கு இந்தி தெரியாது. அப்படியாயின் அவர் தமது தாய்மொழியும், இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிகளில் ஒன்றுமான தெலுங்கில் பேச வேண்டும் என்பது அந்த எதிர்ப்பாளரின் வாதம். ஜனாதிபதி தமது தாய்மொழியில் பேசியிருப்பின் அது ஒருசிலருக்கும் விளங்கி இராது. ஆங்கிலத்தில் அவர் பேசியதால் அநேகமாக எல்லாரும் அதைப் புரிந்து கொண்டிருக்க முடியும். ஆங்கிலத்தையும் இந்தியாவின் தேசிய மொழிகளுள் ஒன்றாக அரசியல் சட்டம் அங்கீகரிக்காததால் அது அந்நிய மொழியென்றும் அதில் பேசுவது கூடாதென்றும் எதிர்ப்பாளர் கூறுவதில் ஓரளவு நியாயமுண்டு.

ஆங்கிலத்தை இந்திய தேசியமொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்க வேண்டுமென்று ஏற்கனவே வற்புறுத்தப்பட்டது. ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்ட ஒரு சிறிய சமூகத்தினர் இந்தியாவில் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் மிகச் சிறிய சமூகத்தினராக இருக்கலாம். என்றாலும் அவர்களும் இந்தியப் பிரஜைகளே. அவர்களது தாய்மொழியான ஆங்கிலத்தையும் விரிந்த மனப்பான்மையுடன் அப்போதே அங்கீகரித்திருப்பின் இன்று இவ்வித எதிர்ப்பு தலைதூக்கி இராது.

இதற்குமாறாக ஆங்கிலத்தை ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்காமல், அது துணை மொழியாக நீடித்திருக்குமென்று சட்டமூலம் புதிய ஏற்பாடு செய்தாலும்கூட, இவ்வித எதிர்ப்புகள் நீடித்து மொழிவெறியர்களுக்குத்தூபம் போடுவதாக இருக்கும். கடையனுக்கும் கடைத்தேற்றமென்ற சர்வோதய தத்துவத்தைப் பின்பற்றுவதாயின் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆங்கிலோ இந்திய சமூகத்தினரின் மொழியான ஆங்கிலத்தையும் புறக்கணிக்காமல் அதையும் அங்கீகரிக்க மறுக்கலாமா?

ரஷ்யா, சீனம், ஜப்பான் உள்ளிட்டு பல்வேறு நாடுகளிலும் சர்வதேச மொழியான ஆங்கிலத்தின் முக்கியத்தை உணர்ந்து அதைக் கற்பிக்கின்றார்கள். அப்படி இருக்க சென்ற 150 ஆண்டுகளுக்கு மேல் ஓர் இணைப்பு மொழியாக இருந்த ஆங்கிலத்தை, நாட்டிலுள்ள ஒரு சமூகத்தின் தாய்மொழியை, அங்கீகரிக்க மறுப்பது எப்படி சர்வோதயக் கொள்கைக்கு உகந்ததாகும்? குறுகிய தேசிய உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல், பரந்த உள்ளத்துடன் இதைப் பற்றிக் கவனித்துத் தீர்மானிக்க வேண்டும். வினோபா பாவே, ராஜாஜி போன்ற உத்தம தலைவர்கள் நேரில் கலந்து பேசி இதைப்பற்றி தீர்மானித்து அரசியல் சட்டத்தில் தக்க திருத்தம் செய்ய வேண்டியதவசியமாகும்.

இது அடிப்படையான விஷயம். ஆங்கிலத்துக்கும் சட்டபூர்வமான தேசிய அந்தஸ்து அளிக்காமல், அது துணை மொழியாக நீடிக்கும் என்று செய்யும் எந்த ஏற்பாடும் உறுதியாக இருக்க முடியாது. அது அஸ்திவாரமில்லாமல், கோட்டை கட்டியது போலாகும். அமைதியையும், ஒற்றுமையையும் பற்றிய விஷயமானதாலும் இலங்கையிலும் இது பற்றிய பிரச்னை இருப்பதாலுமே மீண்டும் இதுபற்றி நாம் எழுத வேண்டியதாயிற்று.

## நட்புறவு சங்க 4-வது ஆண்டுவிழா

குரும்பசிட்டி, வியாழன்

இலங்கை-ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச் சங்கம் ஆரம்பித்து நாலு ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு தமது ஆண்டுநிறைவு விழாவினை இன்று வெள்ளிக்கிழமை பம்பலப்பிட்டியிலுள்ள கலாச்சார நிலையத்தில் கொண்டாடவிருக்கின்றது. இவ்விழாவிற்கு இலங்கை-ஜெ. ஜ. கு. நட்புறவுச் சங்கத்தலைவரும் முன்னைநாள் குருநாக்கல் எம். பி.யுமான திரு. ஜெயபத்திரான தலைமை வகிப்பார். ஜெர்மன் ஸ்தானிகராலய கலாச்சார அதிகாரி திரு. ஹென்றி தொஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மேற்படி நட்புறவுச் சங்க 19 கிளைகள் பங்குபற்றவிருக்கின்றன. விழா முடிவில் ஜெர்மன் திரைப்படக்காட்சி காண்பிக்கப்படும்.

## விநாயகா சதுர்த்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீரகத்தி விநாயகராலயத்தில் இன்று மாலை விசேஷ அபிஷேகமும் அதனுடன் பண்டிதமணி பொன்னம்பலத்தின் கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தொழிற்கல்வியின் அவசியம்

மாணவர்களிடம் மலிந்துள்ள குறைகளையும், குற்றங்களையும் கண்டுபிடித்து அவர்களைத் திருத்துவதில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும், கல்லூரி அதிபர்களும் முன்வரவேண்டும். இன்று நாட்டில் குடிப்பழக்கம் அதிகரித்துள்ளது. அத்துடன் வேலையில்லாத் திண்டாட்டமும் தலைவிரித்தாடுகிறது. பொதுவாக மாணவர்கள் தொழிற்கல்வியைக் கற்காமல் புத்தகக் கல்வியை மட்டும் நம்பியிருப்பதால் இவர்களுக்கு வேலை கிடைப்பது குதிரைக்கொம்பாக இருக்கிறது. இதனால் நாடும் வறுமையை நோக்கிச் செல்கிறது. மாணவர்கள் உரிய காலத்தில் தொழிற்கல்வியைக் கற்காததால் அவர்களின் சிறந்த சேவை நாட்டுக்கு கிடைக்காததுடன் நாட்டின் முன்னேற்றமும் தடைப்படுகிறது.

இக்காலத்தில் இளைஞர்கள் குடிப்பழக்கத்தில் ஈடுபடுவது வருந்தத்தக்கது. வேலையில்லாவிட்டால் குடிப்பழக்கத்தைப் பழகுகிறார்கள். பெற்றோர் ஆசிரியரின் சரியான கண்காணிப்பில்லாத காரணத்தினால் ஆரம்பத்தில் புகைப்பதில் ஈடுபட்ட அவர்கள் குடிப்பதிலும் காலத்தைப் போக்குவது கவலைக்குரிய விஷயமாகும். மாணவர்களை ஆரம்பத்திலே கண்டித்து அவர்கள்மீது சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால்தான் அவர்கள் பிற்காலத்தில் இந்த இழிநிலைக்கு வருகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக விளங்குவது மாணவர்களின் ஆரம்பக் கல்விதான். தொடக்கத்திலேயே அவர்களுக்கு புத்தகக்கல்வியுடன் தொழிற்கல்வியும் அளிக்கப்பட்டிருந்தால் பிற்காலத்தில் இவர்களுக்கு அதிக பயன் ஏற்பட்டிருக்கும். தொழிற்கல்வி புகட்டப்பட்டிருந்தால் மாணவர்கள் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் பொழுது வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்க நேரிடாது. ஆகையினால் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே தொழிற்கல்வி வசதிகள் அளிக்கப்பட்டு பிற்காலத்தில் அவர்கள் நற்பிரஜைகளாகத் திகழ ஆசிரியர்களும் பெற்றோரும் கவனம் செலுத்தவேண்டும்.

**சபா. சண்முகநாதன்**
வவுனியா.

## மாணவிகளுக்கு பஸ்

இராமநாதன் கல்லூரிக்கு நடந்துசெல்லும் பிள்ளைகளின் பரிதாபத்தைக் கண்ணுற்றேன். பிஞ்சுக்கால்கள் நெஞ்சநெடுந்தூரம் கால் நடையால் செல்லும் சிறு பிள்ளைகளையும் கண்டேன் பாவம் எத்தனை எத்தனை பஸ்கள் ஓடுகின்றன. இவற்றில் ஒன்றாவது இவர்களின் பரிதாபத்தைக்கண்டு இரங்கவில்லையா?

இவர்களின் கஷ்டத்தை நீக்கவேண்டுமானால், நம் பெண்குலத்தின் பெருமையைப் போற்றவேண்டுமானால் இவர்களுக்காக ஒரு பிரத்தியேக பஸ் ஓடவேண்டும் யாழ்ப்பாணத்தில் இருந்து சுன்னாகத்திற்கோ அன்றி சங்குவேலியில் இருந்து சுன்னாகத்திற்கோ ஒரு பஸ் ஓடவேண்டும் பாடசாலை மாணவிகளுக்கு மட்டும். எத்தனையோ உடுவில் பாடசாலை மாணவிகளுக்குக்கூட இது பெரும் உதவியாகும்.

நான் இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி எனது பிள்ளைகளுக்கு மட்டுமன்றி எல்லாப் பிள்ளைகளுக்குமாக [illegible]

[illegible]

சங்குவேலி.

## சில தவறுகள்

16-2-65-ல் வெளிவந்த ஈழநாட்டில், கோண்டாவிலைச் சேர்ந்த திரு. பொ. அழகரத்தினம் "சமஷ்டி ஆட்சி" என்ற தலைப்பில் எழுதிய கடிதத்தைக் கண்ணுற்றேன் அதிலே உண்மைக்கு மாறான சில தவறுகளைச் சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

"இந்தி ஆட்சி மொழியானதால்..." என்கிறார் இந்தி இணைப்பு மொழியாக்கப்பட்டுள்ளது இந்தியோடு ஆங்கிலத்தையும் இணைப்புமொழியாக்கவேண்டுமென்றே கிளர்ச்சி நடக்கிறது மாவட்டங்களின் ஆட்சிமொழி வட்டார மொழிகளே.

'இந்தி பேசாத மக்கள் இந்தியாவில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் உள்ளனர்' என்கிறார் இந்தி பேசாதோர் தொகை 44%

'சமஷ்டி ஆட்சி முறையில் மத்திய அரசாங்கம் நினைத்தால் மாநில அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்கிறார். மாணவர் கிளர்ச்சி வெற்றியளித்துள்ளது புனர் ஆலோசனைக்கு முதன் மந்திரிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் சிங்களம் பேசாதோர் ஐந்திலொரு பங்கினரே என்கிறார் 30 வீதமானோர் (இலங்கை, இந்தியத் தமிழர், முஸ்லிம்கள்) தமிழ்பேசும் மக்கள்

'தமிழ் மக்களின் நலவுரிமைகளில் அக்கறை கொண்டவர்கள் அன்றும் இன்றும் இடதுசாரிகளே' என்கிறார் பண்டாரநாயகாவின் மொழிக் கொள்கையே தமது கொள்கையென்கிறார்கள் இன்றைய இடதுசாரியினர் இவர்களையா தலைமைக்கழைப்பது? முதலையைத் தெப்பமெனக்கொண்டு ஆற்றைக் கடக்கலாமா?

**சி. அன்பழகன்**
சங்கானை

## கிழக்கு ஜெர்மன் உதவிமந்திரி

குரும்பசிட்டி, வியாழன்

இலங்கைக்கு விஜயஞ்செய்துள்ள கிழக்கு ஜெர்மன் வெளிநாட்டு வர்த்தக உதவி மந்திரி திரு. வாச்ரெர், பிரபல திரைப்பட தயாரிப்பாளர் திரு பிளுங்பெயர், கலைஞர் குழுவினர் ஆகியோரைக் கௌரவிக்கும் முகமாக எதிர்வரும் சனிக்கிழமை இரவு கைத்தொழில் பொருட்காட்சி சாலையிலுள்ள கிழக்கு ஜெர்மன் அரங்கில் ஜே. ஜ. கு பொருட்காட்சி அதிபர் திரு. வெர்னர் பண்ரெக் விருந்துபசார மொன்றினை அளிக்கவிருக்கின்றார். இவ்விருந்துபசாரத்தில் கலந்து கொள்ள பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அழைக்கப்பட்டுள்ளார். பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும்சமயக்குருமார்களுக்கும் விருந்துபசாரத்திற்கான அமைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன

## ஐயாறன் எழுதுவது

"தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா..." என்ற இனிமையான கீதம் நேற்று அதிகாலையிலே எங்கிருந்தோ காற்றினிலே வந்தது. இலங்கை வானொலியா? முடியவே முடியாது. மறந்தும் அந்த இசைத்தட்டை இலங்கை வானொலியில் இப்போது யாரும் ஒலிபரப்பினால், அவருக்கு மட்டுமல்ல, அந்த இலாகா அதிபருக்கும் உடன் சீட்டுக்கிழிந்துவிடுமல்லவா?

'தமிழ்' என்ற சொல்லடங்கிய தேவார பக்திப் பாடல்களும் பாடப்படாதென்று அவ்வளவு தடபுடல் தர்பார் இலங்கை வானொலியில இருந்துவந்துள்ளது. அப்படியிருக்க, "தமிழனென்று சொல்லடா..." இசைத்தட்டை ஒலிபரப்ப இங்கு யாருக்குத்தான் துணிச்சல்வரும்! இசைத்தட்டு காரணமாக இலங்கை வானொலியில் எவ்வளவோ சிப்பந்திகள் இதுவரைவேலையிழந்துள்ளனர்! பலர் பல்லாண்டுகள் தவிக்கவிடப்பட்டு மீண்டும் வேலையைப் பெற முடிந்தது. கைதவறுதலாகச் செய்துவிட்டாலும் வேலைக்கே ஆபத்துத்தான்

* * *

ஆகவே அந்தக் கீதம் இந்தியாவின் ஆகாசவாணி மூலமே வருவதாக ஊகித்தேன். தமிழகத்தில் மொழிக்கிளர்சசிகள் இன்னும் அடங்காவிடினும், இவ்வித இசைத்தட்டுகளை இந்திய வானொலி, ஒலிபரப்புவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல, மொழிப் போராட்டம் சம்பந்தமாக ஆகாசவாணி எதையும் ஒளிக்காமல், சேதங்கள் முதலிய விபரங்களை ஒலிபரப்பியதாகக் கேட்டுவிட்டு ஓர் அன்பர் ஆச்சரியம் தெரிவித்தார். இது உண்மையில் ஆகாசவாணிதானா அல்லது, கிளர்ச்சிக்காரரின கள்ள ரேடியோவா என்றும் சந்தேகித்தாராம்! இலங்கையிலும் மொழிக்கிளர்ச்சிகள் எவ்வளவோ நடந்தன, அதைப் பற்றி நமது வானொலி ஒரு வார்த்தையும் வெளிவிட்டதா? "மௌனம் கலகம் நாஸதி" என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது போலும். பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் அஸதமித்துவிடுமா?

∴ ∴ ∴

இந்திய ஆகாசவாணியிலே திருமுருக கிருபானந்தவாரியார், எம்பார் விஜயராகவாச்சாரியார், அண்ணாசாமி பாகவதர் போன்றவர்களின் அருமையான சங்கீத கதாப்பிரசங்கங்கள் நடைபெறுகின்றன. ஆனால் நமது இலங்கை வானொலியில் கதாப்பிரசங்கங்களுக்கு பெரிய வாய்ப்பூட்டுபோட்டு விட்டார்கள்! வருகிற மார்ச் 1-ந் திகதி திருக்கேதீச்சரத்திலே நடைபெறும் மகாசிவராத்திரி விழாவை இரவு 9-30 மணி முதல் மறுநாட்காலை6-45வரையில் தொடர்ந்து இலங்கை வானொலி அஞ்சல் செய்கிறதென்றாலும், அங்கு நடக்கும் சங்கீத கதாப்பிரசங்கத்தை அஞ்சல் செய்யமாட்டார்களாம்! ஏன் தெரியுமா? அந்தப் பிரசங்கத்தில் அரசாங்கத்துக்கு மாறாக ஏதாவது கூறிவிடுவார்களோ என்ற அச்சமாம்! அப்படி ஏதும் சொன்னால்தான் என்ன? குடியா முழுகிவிடும்? இதற்கு மாறாக பேச்சுரிமை, கருத்துரிமை இவற்றை அளிப்பதால் அரசாங்கத்தின் புகழ் ஓங்கும்.

இதையெல்லாம் பார்க்கையில், இலங்கை வானொலி நிர்வாகமும் அதிகாரமும் அரசாங்கத்திடம் இருக்கப்படாதென்றும், பிரிட்டனிலுள்ளது போல் ஒரு தனிப்பட்ட கார்ப்பரேஷனிடம் இருக்கவேண்டுமென்றும் தோன்றுகிறது. அப்படிச் செய்தால், அங்கு வேலை

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பார்க்கும் சிப்பந்திகளும் கலைஞர்களும் பயந்தெளிந்து விடுதலை பெறுவதுடன் அதன் கலை நிகழ்ச்சிகளும் புத்துயிர்பெற்று அதிக கவர்ச்சிகரமாகவும் பொது மக்கள் ரசிக்கக் கூடியதாகவுமிருக்கும்.

* * *

விளக்கின்ற நீராகி வித்துமாகி விண்ணோடு மண்ணாகி விளங்கு செம்பொன், துளக்கின்ற துளையாகிச் சோதியாகித் தூண்டரிய சுடராகித் துளக்கில வான்மேல், முளைக்கின்ற கதிர்மதியும் அரவுமொன்றி முழங்கொலி நீர்க்கங்கையொடு மூவா தென்றுந், திளைக்கின்ற சடையானைத் திருமாற் பேற்றெஞ் செம்பவளக் குன்றினைச் சென்றடைந்தேன் நானே.

— அப்பர் சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதன்மந்திரிகள் மகாநாடு முடிந்தபின் அரசாங்க அறிக்கை

## மொழிப்பிரச்னை பற்றி உபஜனாதிபதி தகவல்

### மேற்குவங்கம், கேரளத்தில் பாடசாலைகள் மூடப்பட்டன

புதுடில்லி, பெப். 18

பிரதம மந்திரி சாஸ்திரி நேற்று காங்கிரஸ் பாராளுமன்றக்கட்சிக் கூட்டத்தில் ஆச்சரியபாவே உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்ட செய்தியை அறிவித்தபோது மகிழ்ச்சி ஆரவாரம் ஏற்பட்டது.

உண்ணாவிரதத்தை முடித்த செய்திகேட்டு தாம் நிம்மதியுற்றதாக ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் வினோபாபாவுக்குத் தந்தி அனுப்பியிருக்கிறார்.

**காமராஜ்**

காங்கிரஸ் தலைவர் காமராஜ் நேற்று ராய்ப்பூரில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் மொழி, மதம், ஜாதி ஆகியன தேசிய ஒற்றுமையைக் குலைக்க அனுமதிக்கப்படமாட்டாது எனக் குறிப்பிட்டார்.

மொழிபற்றி அவர் பேசுகையில் ஹிந்தி தேசிய மொழி என்றும் தென்னிந்திய மக்கள் அதைக்கற்க முடியும் என்றும் கூறிய காமராஜ், இவ்விஷயத்தில் அவசரப்படுவது தென்னிந்திய மக்களின் அச்சத்தைக் கிளப்புவதாய் இருக்கிறது என்றும் கூறினார்.

**அரசாங்க அறிக்கை**

டில்லியில் நடைபெறவிருக்கும் முதன்மந்திரிகள் மகாநாட்டின் பின் மொழிப்பிரச்னைபற்றி அரசாங்கம் ஒரு அறிக்கை வெளியிடும் என ராஜ்ய சபையில் உபஜனாதிபதி ஸகிர்ஹுசெய்ன் அறிவித்தார்.

**பாடசாலைகள் மூடப்பட்டன**

மேற்கு வங்காளத்தில் சகல பாடசாலைகளையும் வருகிற 24-ம் திகதிவரை மூடும்படி அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

கேரளத்தில் இன்று திறக்கப்படவிருந்த பாடசாலைகளை வருகிற 22-ம் திகதி வரை மூடும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் பகிஷ்கரித்துவருவதே இதற்குக் காரணம்.

**சிறிய அசம்பாவிதம்**

கேரளத்தில் பிரயாணிகள் ரயிலில் ஒரு பிரயாணிக்குக் காயம் விளைவிக்கப்பட்டது. ஆலப்புழை, கோட்டயம் ஆகிய இடங்களில் பஸ்களும், கார்களும் மறிக்கப்பட்டன. 5 பேருக்குமேல் கூட்டம்கூட்டப்படாது என இங்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. நெல்லூரில் 100 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

**காங்கோவில்**

## உயர் அதிகாரிகள் படுகொலை

பிரேஸில்விலி, பெப். 18

காங்கோ பிரேஸில்விலியில் அட்டோர்ணி ஜெனரலும் மற்றோர் உயர் அரசாங்க அதிகாரியும் கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது. இவர்களுடைய பிரேதங்கள் காங்கோ ஆற்றங்கரையில் கிடந்தன. சுப்ரீம்கோர்ட் தலைவரும் கடத்தப்பட்டிருக்கிறார். இவரும் படுகொலைசெய்யப்பட்டிருப்பாரெனக் கருதப்படுகிறது.

—

## "கிழக்கு ஜெர்மனியை அங்கீகரியோம்"

— நாஸர்

கெய்ரோ, பெப். 18

கிழக்கு ஜெர்மன் தலைவர் திரு. உல்பிரைட் கெய்ரோ வருவதால் கிழக்கு ஜெர்மனியை ஐக்கிய அரபியக் குடியரசு அங்கீகரித்ததாகாதென ஜனாதிபதி நாஸர் கூறினார்.

அதேசமயம் மேற்கு ஜெர்மனி தனது பொருளாதார உதவியை நிறுத்தியிருப்பதைக் கண்டு தாம் அஞ்சவில்லையென்றும் அவர் கூறினார்.

—

## இங்கிலாந்து வெற்றியீட்டியது

கேப்டவுன், பெப். 18

இங்கிலாந்துக்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வரிசையில் இங்கிலாந்துக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. நேற்று முடிவடைந்த 5வது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதல் டெஸ்டில் இங்கிலாந்து வெற்றிபெற்றது. மற்றும் நான்கு டெஸ்டுகளும் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

—

## நேபாள தினம்

புதுடில்லி, பெப். 18

இன்று நேபாள தேசிய தினத்தை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் ஆகியோர் மன்னர் மகேந்திராவுக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

—

## டி. டி. கே.

புதுடில்லி, பெப். 18

நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி நிலை மிக சிரமமாக இருக்கிறது என நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினார். இன்னும் 10 நாட்களில் மத்திய அரசாங்க பட்ஜட் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

—

## 68 ஆசிய-ஆபிரிக்க வெளி மந்திரிகள்

அல்ஜியர்ஸ், பெப் 18

ஆசிய ஆபிரிக்க உச்சித் தலைவர்கள் மகாநாடு ஆரம்பமாவதற்கு முன் 68 ஆசிய—ஆபிரிக்க வெளிநாட்டு மந்திரிகள் அல்ஜியர்ஸில் கூடுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

# ஜெனிவா மகாநாடு ஒன்றை கூட்டவேண்டும்

## வியட்னும் பிரச்னைபற்றி ஜனாதிபதி ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, பெப். 18

சீனா அணுகுண்டை வெடித்தபோதிலும் மற்றொன்றை வெடிக்கவிருந்தபோதிலும் இந்தியா அணுகுண்டை உற்பத்தி செய்யாது என ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நேற்று பார்லிமெண்டின் கலப்புக் கூட்டத்தில் அறிவித்தார்.

"எனினும் இந்தியா சீனத் தாக்குதலை முறியடிக்க தக்க பலம் பெற உறுதிகொண்டிருக்கிறது என அவர் கூறினார்"

வியட்னுமில் ஆபத்தான நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாக விரைவில் ஜெனிவா மகாநாடு ஒன்று நடைபெறவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இது சம்பந்தமாக இந்தியா நட்பு நாடுகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாயும் ஜனாதிபதி அறிவித்தார்.

கடந்த 14 ஆண்டுகளில் மின்சாரம் அளிக்கப்பட்ட கிராமங்கள் 10 மடங்காக அதிகரித்திருப்பதாய் அவர் கூறினார்.

ஜனாதிபதி தமது உரையின் ஆரம்பத்தில் நேருவுக்குப் புகழாஞ்சலி செலுத்தினார்.

திரு. நேரு ஆப்த நண்பராகவும், அறிவிற் சிறந்த மேதையாகவும் இருந்து இந்திய மக்களுக்கு நல்வழி காட்டினார் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# "வியட்னும் நிலைமை மிக அபாயகரமாய் இருக்கிறது"

## ஜோன்ஸன் அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 18

அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று முன்னாள் ஜனாதிபதி ஐஸன்ஹோவரைச் சந்தித்து வியட்னும் நிலைமைபற்றிப் பேசினார்.

அதன்பின் அவர் விடுத்த அறிக்கையொன்றில் தென் வியட்னும் நிலைமை மிகவும் அபாயகரமாய் இருப்பதாகக் கூறினார்.

தென் வியட்னுமில் அமெரிக்கா யுத்தத்தை விஸ்தரிக்க விரும்பவில்லையென்றும் ஆனால் அங்கு சுதந்திரத்தைப் பாதுகாக்கும் என்றும் திரு. ஜோன்ஸன் தெரிவித்தார்.

லண்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனுடன் வியட்னும் பற்றி ஆலோசனை நடத்தினார்.

—

## 9 லட்சத்தை தாண்டியது

புதுடில்லி, பெப். 18

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 9 லட்சத்தைத் தாண்டிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

—

## 'ரேஞ்சர் 8'

கேப்கென்னடி, பெப். 18

சந்திரனைப் புகைப்படம் எடுக்க 'ரேஞ்சர் 8' என்ற ராக்கெட்டை அமெரிக்கா நேற்று அனுப்பியது. இது சந்திரனை 2000 படங்கள் எடுக்கும் என அறிவிக்கப்படுகிறது.

—

## சிம்லாவில் குளிர்

சிம்லா, பெப். 18

சிம்லாவில் நேற்று கடும் பனி பெய்தது. சில இடங்களில் ஒன்றரை அடி பனி காணப்பட்டது.

—

## ஜோர்டான் மன்னர்

அம்மான், பெப். 18

ஜனாதிபதி நாஸருடன் பேச்சு நடத்தியபின் ஜோர்டான் மன்னர் ஹுஸெய்ன் கெய்ரோவிலிருந்து தாயகம் திரும்பினார்.

—

## கிளிநொச்சித் தொகுதி

கிளிநொச்சி, வியாழன்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடவிருக்கும் திரு. வேதநாயகம் இராமலிங்கம் போட்டியிலிருந்து வாபஸ்பெற்றுக்கொண்டதாகத் தவறான முறையில் பிரசாரம்செய்யப்பட்டு வருவதாயும் இது உண்மையல்லவென்றும் திரு. இராமலிங்கம் நிச்சயம் போட்டியிடுவதாயும் அறிவிக்கப்படுகிறது.

## தமிழர்களின் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏவுப்பணமும் குவிந்திருக்கும். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுவதாக பத்திரிகைகள் பிரமாதமாகப் பிரசுரிக்கின்றன. ஐக்கியதேசியக்கட்சியினர் பதவிக்காலத்தில் இருந்தபொழுது நாட்டின் ஜனத்தொகை 80 லட்சமாகவிருந்தது. இப்பொழுது ஒரு கோடிக்குமதிகமாகிவிட்டது. அன்றும் வேலையில்லாத் திண்டாட்டம் இருந்ததுதான். ஆனால் இவற்றை இப்பொழுது பெரிதுபடுத்தி பத்திரிகைகள் பிரசுரிப்பது வேண்டுமென்றேதான்" என்றும் திருமதி விவியன் குணவர்த்தன தெரிவித்தார்.

தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க கூட்டரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

—

## அண்ணாவுக்கு எஸ்.ஜே.வி.பாராட்டு

யாழ்ப்பாணம் வியாழன்,

"இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும், தமிழ் மொழியையும் பாதுகாப்பதற்கு நீங்கள் நடத்திவரும் வீரப் போராட்டத்தை நாங்கள் மிகவும் அனுதாபத்துடனும் அக்கறையுடனும் அவதானித்துக்கொண்டிருக்கிறோம். உயிரைத் துறந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களை இழந்துநிற்கும் குடும்பங்களுக்கும், தமிழ் நாட்டினருக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்."

தமிழரசுக்கட்சிதலைவர் திரு எஸ ஜே வி செல்வநாயகம், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு சி என் அண்ணாதுரைக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டுமாணவர் புரிந்த வீரச்செயல்கள் தமிழர் வரலாற்றில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதுஉறுதியென்றும் திரு எஸ ஜே வி தமது செய்தியில் எடுத்துக் கூறியுள்ளார்.

(இந்தச் செய்தி யாழ்ப்பாணத்திலிருந்து இன்று தான் நமக்குத் தபாலில் கிடைத்தது)

—

## ஹம்ப்ரே

வாஷிங்டன், பெப். 18

அணு ஆயுதப் போட்டியை நிறுத்துவதில் ரஷ்யாவுடன் ஒரு உடன்பாட்டுக்கு வர அமெரிக்கா முயலும் என உதவி ஜனாதிபதி திரு ஹம்ப்ரே கூறினார்.

# கெம்பியா சுதந்திர நாடாக உருவாகியது

## மேற்கு ஆபிரிக்காவின் கடைசி பிரிட்டிஷ் காலனி

லண்டன், பெப். 18

மேற்கு ஆபிரிக்காவில் பிரிட்டனின் கடைசிக் காலனியாயிருந்த கெம்பியா நேற்று நள்ளிரவு காமன்வெல்த்துக்குள் சுதந்திர நாடாகியது.

கெம்பியா ஆபிரிக்காவில் சுதந்திரமடைந்துள்ள 36வது நாடாகும். காமன்வெல்த்தில் அது 21வது நாடாகவிருக்கிறது.

புதிய கெம்பியா அரசாங்கத்தை சீனா அங்கீகரித்திருக்கிறது.

நேற்று நள்ளிரவு 121 பீரங்கிக் குண்டுகள் வெடித்துச் சுதந்திரத்தை அறிவித்தன. பிரிட்டனின் சார்பாக கென்ட் கோமகனும் மற்றும் பல நாட்டுப் பிரதிநிதிகளும் புடைசூழ 122 வருடங்களாகப் பறந்த 'யூனியன் ஜாக்' கொடி கீழே இறக்கப்பட்டு 4 வர்ண கெம்பியா கொடி ஏற்றப்பட்டது.

## 28 இந்தியர் சுடப்பட்டனர்

கராச்சி, பெப். 18

காஷ்மீர் யுத்த எல்லையில் இரு இடங்களில் இந்தியத் துருப்புகள் அத்துமீறினரென்றும், அவர்கள்மீது சுட்டதில் 28 இந்தியத்துருப்புகள் மாண்டதாயும் பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

—

## வெளியேற்ற உத்தரவு

டமாஸ்கஸ், பெப். 18

ஸிரியாவிலுள்ள அமெரிக்க ராஜதந்திரி ஒருவரை வெளியேற்றுமாறு அரசாங்கம் உத்தரவிட்டது. இவர் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தாராம்.

# ரஷ்ய ராணுவத்தில் 24 லட்சம் பேர்

## உதவி பாதுகாப்பு மந்திரி தகவல்

மாஸ்கோ, பெப். 18

ரஷ்யா அணுசக்தி நீர்மூழ்கிகளைக் கட்டிவருவதாயும், விமானப்படைகள் அஸ்திரங்களுடன் பலப்படுத்தப்படுவதாயும் ரஷ்ய உதவி பாதுகாப்பு மந்திரி திரு. சுகவோவ்ஸ்கி தெரிவித்தார்.

ரஷ்ய ராணுவத்தில் தற்போது 24,00,000 வீரர்கள் இருப்பதாயும் அவர் கூறினார்.

ராணுவச் செலவை ரஷ்யா மேலும் குறைக்கவிருக்கிறது எனக் கூறிய அவர் ஹங்கேரி, போலந்து, கிழக்கு ஜெர்மனி ஆகி இடங்களிலுள்ள ரஷ்யப் படைகளை ஒரு நிபந்தனையின் பேரில் வாபஸ் பெறத் தயார் எனக் கூறினார். இதேபோல் மேற்கு நாடுகளும் செய்யுமானால் ரஷ்யா அப்படிச் செய்யும் என்று அவர் கூறினார்.

—

## பாகிஸ்தான் ராக்கெட்

கராச்சி, பெப். 18

பாகிஸ்தான் தனது 2-வது ராக்கெட்டை நேற்று வெற்றிகரமாக அனுப்பியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'தமிழர்களின் கஷ்டத்துக்கு கே.எம்.பியும், பிலிப்புமே காரணம்'

—விவியன் குணவர்த்தன

# கூட்டாட்சி வெற்றி பெறுவது திண்ணம் என்கிறார் பீட்டர் கெனமன்

மாவிட்டபுரம், புதன்

"எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டரசாட்சி வெற்றி பெறுவது திண்ணமே. ஜனநாயகம் வேண்டும் என்று கூறித் திரியும் சில அரசியல் கட்சியினர், வானொலி நிலையத்திற்கு நெருப்பு வைப்பதிலும், துணி வகைகளுக்கு நெருப்பு வைப்பதிலும் அதிக அக்கறை செலுத்தி ஜனநாயக வழிமுறைகளையே குழி தோண்டிப் புதைக்கப் பார்க்கிறார்கள். இப்படியான நாசவேலைகளில் இந்தச் சக்தியினர் ஈடுபடுவதால் இவர்கள் ஜனநாயக முறைகளைப் பின்பற்றவில்லை என்பது தெளிவாகப் புரிகிறது" என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பீட்டர் கெனமன் தெரிவித்துள்ளார்.

இணுவில் கந்தசுவாமிகோவிலுக்கருகில் இன்றுமாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில்தான் திரு பீட்டர் கெனமன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். உடுவில் தொகுதியில் இடதுசாரி முன்னணி சார்பில் போட்டியிடும் திரு. நாகலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு. பொ. இளையதம்பி தலைமை வகித்தார்.

திரு. பீட்டர் கெனமன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், நாட்டைப் பல பிரச்னைகளும் எதிர் நோக்கின: மொழிப்பிரச்னை, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரப் பிரச்னை மற்றும் எத்தனையோ பெரிய பிரச்னைகள் எல்லாம் இந்த நாட்டில் உருவெடுத்தன. ஆனால் இவை எதற்கும் இதுவரை நிரந்தரமான தீர்வு எதுவும் காணவில்லை, இந்த நாட்டு மக்களை எதிர் நோக்கியுள்ள இந்தப் பிரச்னைகளை எந்த அரசாங்கமும் தீர்த்துவைக்க முன்வரவில்லை. ஆனால் கூட்டரசாங்கம் இவற்றைத் தீர்த்துவைக்க பல திட்டங்களை வரைந்திருந்தது இதையெல்லாம் முதலாளி வர்க்க கட்சிகள் தடை செய்து விட்டன,

சோஷலிஸத்தை நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது சமூக விரோத சக்திகளால் உருவாக்கப்படும் புரட்சி வாதியினருக்கு இந்த நாட்டைப் பலியிடப் போகிறீர்களா? இந்த நாடு இப்பொழுது இரு சக்திகளினுல் பிரிக்கப்பட்டிருக்கிறது. லங்கா சமசமாஜக்கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றினுல் கூட்டரசாக உருவாக்கப்படும் சோஷலிஸ பாதையில் செல்ல முன்வரப் போகிறீர்களா அல்லது மற்றைய அரசியல் கட்சிகள் வகுத்த திட்டத்துக்கு இந்த நாட்டை ஒப்படைக்கிப் போகிறீர்களா? ஆனுல் எதிர் வரும் தேர்தலில் கூட்டரசாங்கம், பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வரப்போவது உண்மை என்பது நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

சமஷ்டிக்கட்சியினதும், தமிழ் காங்கிரஸினதும் உண்மை நிலை என்ன? தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதைவிட்டுதனிமையாக்குவதில் இவ்விருகட்சிகளும் ஈடுபட்டிருக்கின்றன. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்க கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் காங்கிரஸ், சமஷ்டிகட்சி தலைவர்களும் மற்றும் திரு. சுந்தரலிங்கமும் தமிழர்களின் எதிர் காலம் பற்றி எடுத்துரைத்திருக்கிறார்கள். சமஷ்டிகட்சி சார்பில் பேசிய திரு. அமிர்தலிங்கம்; சமஷ்டி ஆட்சிமுறை கிடைக்காவிட்டால் இறுதியில் தனியாட்சி என்பதை எடுத்து விளக்கியுள்ளார், இதை மற்றைய தலைவர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இது உண்மையென்றால் சமஷ்டிகட்சியின் குறிப்பான கொள்கை என்ன? சமஷ்டியா அல்லது தனியாட்சியா என்பதில் சமஷ்டிக்கட்சி இதுவரை எதையும் சரியாகத் தீர்மானிக்கவில்லை என்பது இதிலிருந்து நன்கு புலனாகிறது. இவர்களிடம் ஸ்திரமான கொள்கை இல்லை. தமிழர்களிடம் ஐக்கியம்தேவை ஒற்றுமை தேவை என்று கூறும் இவர்கள், தமிழ்சமூகத்தை பிரித்து வைப்பதில் ஈடுபட்டிருக்கின்றனர், இவர்களில் ஒரு பகுதியினர் ஐக்கிய தேசியக்கட்சியை வெளிப்படையாக ஆதரிக்கின்றனர், மற்றப்பகுதியினர் மறைமுகமாக ஆதரவு கொடுக்கின்றனர். இவ்விரு கட்சியினரும் தங்களுக்குள் "சண்டை" போட்டுக் கொள்கிறார்களே தவிர தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதில் அக்கறை செலுத்துகிறார்களில்லை.

சமஷ்டி கட்சியினர் சிங்கள சிறி எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தனர். இதற்கு எதிராக அவர்கள் ஆரம்பித்த இயக்கம், மொழிப் பிரச்னையைத் தீர்த்துவைக்கவில்லை, யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை சீர்கேடாக இருப்பதற்கு என்ன காரணம்? பணக்காரர்கள் 'ஸ்ரீ' கார்களில் செல்கிறார்கள். ஏழைகள் கஷ்டப்பட்டு பஸ்ஸில் செல்கிறார்கள். மட்டக்களப்பில் 'ஸ்ரீ' பஸ்கள் அதிகமாக சேவையாற்றுகின்றன. அங்கு பொதுமக்கள் அதிக சௌகரியத்தை அடைந்துள்ளனர்.

ஜாதிக விமுக்தி பெரமுனை மகாஜன எக்ஸத் பெரமுனை ஆகியவற்றுடன் ஐக்கிய தேசியக் கட்சி கூட்டாகச் சேர்ந்து ஆட்சி பீடம் ஏறுமானுல் சமஷ்டிக் கட்சியினதும், தமிழ் மக்களினதும் நிலைமை எப்படியாகும் என்பதை நினைத்தும் பார்க்க முடியாது. 1960-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலுக்கும் இப்போதைய தேர்தலுக்கும் அதிக வித்தியாசமுண்டு. பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் திறமையான ஆட்சியினுல், ஸ்திரமான கொள்கையினுல் நாடு இன்று அதிக நன்மைபெற்றிருக்கிறது. இதனை மக்கள் நன்குணர்ந்து கூட்டரசாங்கத்தை மீண்டும் ஆட்சியிலமர்த்த முன்வரவேண்டும்.

"சமஷ்டிக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ் ஆகியவற்றினுடைய, தமிழர்களே ஒற்றுமைப்படுங்கள்" போன்றகொள்கைகள் இப்போதைய தேர்தல் தந்திரங்களாகும் தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதில் இவை அதிகம் அக்கறை செலுத்தவில்லை. அதற்குப்பதில் தாங்களே தங்களை முட்டி மோதிக்கொள்கிறார்கள். நீங்கள் இம்முறை நன்கு சிந்திக்கவேண்டும், ஏன், எதற்காக ஒருவரை பார்லிமென்டுக்கு அனுப்புகின்றோம் என்பதை உணரவேண்டும். பழைய நிலையை மறந்து, புதியபாதையில் செல்வதற்கு புதியகொள்கையொன்றைவகுத்துக் கொள்ளுங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்."

திரு. பொ. நாகலிங்கம் பேசுகையில், "25 வருட காலத்தில் அல்லது 10 வருடத்தில் யாழ்ப்பாண மாவட்டம் வரண்டபிரதேசமாகுமென்று இஸ்ரேல் நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். இதனைத் தடுப்பதற்கு மகாவலி கங்கையை இங்கு திருப்பி விட்டால் போதும். இதனையே கூட்டரசாங்கமும்விரும்புகிறது. இது கூட்டரசாங்கத்தினுல் மட்டுமே முடியும்" என்று கூறினர்,

கே. எம். பி, ராஜரத்ன, பிலிப் குணவர்த்தன, ஐ. தே. கட்சியினரால் இத்திட்டம் நிறைவேற்றப்படமாட்டாது என்றும் திரு. நாகலிங்கம் உறுதிப்படுத்தினர்.

## திருமதி விவியன் பேச்சு

திருமதி விவியன் குணவர்த்தன பேசுகையில் தமிழர்களின் இந்தக் கஷ்டமான நிலைக்குக் காரணகர்த்தாவாக இருந்தவர்கள் கே. எம். பி ராஜரத்தினவும் பிலிப் குணவர்த்தனவுமே என்றும் இவர்களுடன் தமிழரசுக்கட்சியினர் ஒத்துழைக்கும்வரை தமிழர்களின் இன்னல்கள், பிரச்னைகள் ஒருபொழுதும் தீர்க்கப்பட மாட்டாது என்றும் கூறினர்,

"தென்னிலங்கை மக்கள் இப்பொழுது புதியதொரு போராட்டத்தில் இறங்கியுள்ளனர். மார்ச் மாதம் 22-ம் திகதி கூட்டு சோஷலிஸ அரசாங்கமொன்றை தெரிவு செய்வதில் இவர்கள் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கின்றனர் என்றும் திருமதி விவியன் கூறினர்.

"சோஷலிஸம் என்றதற்கு தமிழரசுக் கட்சியினர் தவறான கருத்துக் கொண்டுள்ளனர். வங்கிகள், தேயிலைத் தோட்டங்களின் மூலம்தான் இந்த நாட்டுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. இந்த நாட்டின் அபிவிருத்திக்கு தேயிலைத் தோட்டங்கள் பெரிதும் உதவுகின்றன. பஸ்களை தேசியமயமாக்கியதால் அரசாங்கத்துக்கு நல்ல வருமானம்கிடைத்திருக்கிறது. ஆகையினுல் தேயிலைத் தோட்டங்களையும் வங்கிகளையும் அரசாங்கம் தேசியமயமாக்க வேண்டும்" என்றும் திருமதி விவியன் குறிப்பிட்டார்.

"வட இலங்கையிலுள்ள தமிழர்களை பல பிரச்னைகள் எதிர்நோக்கியிருப்பது போல தென்னிலங்கை மக்களையும் பல பிரச்னைகள் எதிர்நோக்கியிருக்கிறது. அவர்களுக்கு நிலம் இல்லை. சிலருக்குக் காணி இருந்தாலும் அதைத் திருத்த முடியாத நிலையில் அவை இருக்கின்றன. கல்வி கற்க அவர்களுக்கு போதிய வசதிகளும் இல்லை. காரணம் அதிகமான பாடசாலைகள் அங்கு இல்லாததே. அப்படி அங்குள்ளவர்கள் கல்வி கற்றாலும் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகிறது. நானாந்த வருமானம் குறைவாக இருப்பதால் அவர்களின் வாழ்க்கைப் பிரச்னையும் மோசமாகவிருக்கிறது. ஆகையினுல் தென்னிலங்கையில் வாழும் மக்கள், வடக்கு மாகாண மக்களைப் பார்க்க போதிய சலுகைகள் பெற்றிருக்கிறார்கள் என்று அவ்வளவாகக் கூற முடியாது. இவை எல்லாவற்றுக்கும் தீர்வுகாண எம்மிடையே ஒற்றுமை தேவை" என்றும் திருமதி விவியன் குணவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கியதேசியக் கட்சியினர் இலங்கை இந்தியர்களுக்குஎதிரான இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றனர், இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு விருப்பமில்லை. அண்மையில் வெற்றிகரமாக செய்து கொள்ளப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை ஒரு தேர்தல் பிரசாரமாக உபயோகித்து வருகிறார்கள். இக்கட்சியினர் அரசாங்கத்துக்கு எந்தவிதத்திலும் ஒத்துழைப்பு அளிக்கவில்லை. நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருப்பதில் இவர்கள் அதிகம் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழரசுக்கட்சியினர் இதுவரை வடக்கு, கிழக்கு மக்களுக்கு என்ன செய்தார்கள்? ஆனுல் முதலாளிவர்க்கத்தின் உரிமைகளுக்காக இக்கட்சியினர் அதிகம் பாடுபட்டிருக்கிறார்கள், ஐக்கியதேசியக் கட்சி தனது 12 வருட பதவிகாலத்தில் தமிழர்களின் உரிமைகளையெல்லாம் முழுமையாகப் பறித்து அவர்களுக்கு இன்னல்கள் பல புரிந்திருக்கின்றது. இப்படியானதொரு கட்சியுடன் சேர்ந்துதான் தமிழரசுக்கட்சியினர் கூட்டரசாங்கத்தை வீழ்த்தியுள்ளனர்" என்றும் திருமதி விவியன் கூறினர்.

கூட்டரசாங்கத்தின் சோஷலிஸ கொள்கையின் ஒன்று பஸ் தேசியமயமாகும். பஸ் தேசியமயமாக்கப்பட்டதால் பலலட்சம் ரூபா லாபம் கிடைத்திருக்கிறது. இதன்பலனுக 2000 பஸ் ஊழியருக்கு 150 ரூபாவீதம் போனஸ் கொடுத்திருக்கின்றோம். பெட்ரோலியம் கூட்டுஸ்தாபனம் அமைக்கப்பட்டதாலும் பல கோடி ரூபா லாபம் கிடைத்தது. இப்படியான ஸ்தாபனங்கள் தனிப்பட்டவர்களின் கையிலிருந்தால் பொதுமக்களுக்கு நாட்டுக்கு நலன் கிடைத்திருக்காது, தனிப்பட்ட சிலரின் கையில்தான் இவ்வ

(3-ம் பக்கம் பார்க்க)





இலஸ்டோ
காலணிகளைப் பாவியுங்கள்

மிருதுவான பாதம் வரையிலும் உங்கள் முழுத்தோற்றமும் சௌகரியமாக இருப்பதற்கு மலர் இதழ் போன்ற பஞ்சு மெத்தை சொகுசுள்ள இலஸ்டோ காலணிகளைப் பாவியுங்கள். பாதங்களுக்கு குளுமையளிக்கும் இலஸ்டோ காலணிகள் கனக்குறைவானவை, வளையுந்தன்மையுடையவை, நீடிய பாவனைக்கு உத்தரவாதமுடையவை.




இலஸ்டோ பேட்ரெக்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள தகுதிபெருதவர்களுக்கு மீண்டும் கட்டாய ஓய்வு

பம்பலப்பிட்டி, வியாழன்
அரசகரும மொழியில் (சிங்களத்தில்) தேர்ச்சி பெருத அரசாங்க சேவை ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டிருக்கிறது.

சிங்களத்தில் தேர்ச்சி பெருத காரணத்தினுல் இவர்கள் அடுத்த வருடம் ஜனவரி முதல் திகதியன்று கட்டாய ஓய்வு பெறவேண்டுமென அறிவிக்கப்பட்டடுள்ளது

சிங்களத்தில் தேர்ச்சி பெருததால் தொடர்ந்து சேவையிலிருந்து வரமுடியாது என்றும் இதன்காரணமாக கட்டாய ஓய்வு பெற வேண்டிய திகதி பின்னர் தெரிவிக்கப்படுமென்றும் முன்னர் இவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

1963-ம் வருடம் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் சிங்களத்தில் தேர்ச்சி பெருதவர்கள் தாம் அவ்வாறு தேர்ச்சி பெற முடியாமைக்கு தெரிவித்த விளக்கம் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாக இருக்கிறது என இலாகாதலைவர்கள் மேற்குறிப்பிட்டவர்களுக்கு தெரிவித்துள்ளார்கள். அரசாங்கசேவை வட்டாரங்கள் இவ்வித கட்டாய ஓய்வு, நிரந்தரக் காரியதரிசிகளுக்கு சென்ற வருடம் அனுப்பப்பட்ட இரகசிய சுற்றறிக்கைக்கு முரணனது என்றும் மேற்படி சுற்றறிக்கையில் திறைசேரியின் மறு அறிவித்தல் வரை இவ்வித கட்டாய ஓய்வு வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தனர் என்றும் தெரிவித்துள்ளன.

## கடிதத்தின் உல்லாசபயணம்

யாழ்ப்பாணம், வியாழன்
கொட்டியாகலைத் தோட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட கடிதமொன்று தென்னிந்தியாவில் சுமார் இரண்டு மாதகாலம் சுற்றிப் பிரயாணஞ் செய்துவிட்டு உரியவரிடம் சேர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு டிஸம்பர் மாதம் 15-ம் திகதி கொட்டியாகலையை சேர்ந்த இராமையா என்பவர் மாவிட்டபுரம் கணேசையர் தமிழ்ச் சங்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளுமுகமாக கட்டுரை ஒன்றினை தமிழில் முகவரியிட்டு அனுப்பினர். கட்டுரை அனுப்பப்பட்ட பால் கேற்று முன் தினம் கணேசையர் தமிழ்ச் சங்கத்தாரிடம் கிடைத்தது. அந்தத் தபால் கடந்த 60 நாட்களாக மதுரை, சென்னை போன்ற இடங்களுக்கெல்லாம் விஜயஞ் செய்து அவ்வப்பகுதி தபால் நிலைய முத்திரைகளுடன் விலாசதாரரிடம் சேர்ந்துள்ளது.

## உத்தியோகஸ்தர் போதாது

இலங்கை வானெலியில்

பம்பலப்பிட்டி, வியாழன்
இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்புப் பகுதியில் போதியளவு உத்தியோகஸ்தர்கள் இல்லாத காரணத்தால் ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


REGAL — JAFFNA
NOW SHOWING
Ed fury
in
URSUS
(Totalscope-Eastman color)

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்: 485)
எம். ஜி. ராமச்சந்திரன் சரோஜாதேவி (நடித்த)
மாடப்புரு
தினசரி 6-30 9-30.
சனி, ஞாயிறு
2-30, 6-30, 9-30.

இன்ரோடு திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பினாரா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (காவலபிட்டி) மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப 2-30, 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00
ஜெமினி கணேசன் – சாவித்திரி (நடித்த)
கற்பகம்


## பிணைப்பணம் மோசடி

காங்கேசன் துறை, வியா
காங்கேசன்துறை பட்டினசபையில் நேற்று நடந்த மாதாந்தக் கூட்டத்தில் காங்கேசன் துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் வென்டருக்கென கட்டப்பட்ட பிணைப் பணத்தை யாரோ இனந்தெரியாத நபர் பட்டினசபையிலிருந்து பெற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்டதன் பேரில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காரியதரிசி பிணைப்பணத்தை எடுக்க மனு பண்ணியிருப்பதால் அதற்குரிய வவுச்சரை இரகசியப் பொலிஸாருக்கு கொடுத்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு. க, வைத்திலிங்கம் கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. கூட்டத்திற்குப் பட்டினசபை உபதலைவர் திரு. வி இரத்தினராசா தலைமைவகித்தார்.

## பாடசாலைகள் திருத்தப்படவில்லை

யாழ்ப்பாணம், வியா.
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமீபத்தில் வீசிய சூறுவளி காரணமாக இப்பகுதிகளில் சேதமடைந்துள்ள பல பாடசாலைகள் இன்னும் திருத்தப்படாதிருக்கின்றன.

இவ்வாறு பாடசாலைகள் திருத்தப்படாததால் மாணவர்களும் ஆசிரியர்களும் போதிய பாதுகாப்பின்றி இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது

சாவகச்சேரி, வியாழன்
கடந்த சில தினங்களாக ஆனையிறவில் 9 65" மழை பெய்துள்ளது. இதன்காரணமாக ஆனையிறவு உப்பளத்தில் உப்புப்பாத்தி வரம்புகள் பெரும் சேதமடைந்துள்ளன. சிறுபோக உப்பு உற்பத்தி இந்த மழை காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

## மாணவன் தற்கொலை

உடுப்பிட்டி, வியாழன்
புலோலியில் வசிப்பவரும் நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய மாணவனுமான ரி. விஷ்ணுகாந்தன் என்பவர் (17 வயது) வல்லிபுரக் கோவிலையடுத்துள்ள சவுக்கு மரத் தோப்பில் தனது சாரத் துணியினலேயே கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

கடந்த பதினைந்து நாட்களாக இவரைக் காணுமல் இவரது பெற்ருேர் தேடிக்கொண்டிருந்தனர். பொலிஸிலும் புகார் செய்ததுடன் பத்திரிகையிலும் விளம்பரம் செய்திருந்தனர். 16ந் திகதி சுருக்கிட்டுத் தொங்கிக்கொண்டிருந்த இவரின் சடலத்தை ஆடு மேய்ப்பவர்கள் சிலர் அடையாளங் கண்டுபிடித்தனர். கடந்த பதினைந்து நாட்களாகவே இச்சடலம் தொங்கியிருக்கிறது. முழங்காலுக்குக்கீழ் எந்த உறுப்பும் காணப்படவில்லை. கைவிரல்களும் இருக்கவில்லை. நரிகள் தின்றிருக்கலாமெனக் கருதப்பட்டது. இவ்விளைஞனைப்பற்றித் தாயாரிடம் விசாரித்தபோது கொழும்பு கைத்தொழில் பொருட் காட்சிக்குச் செல்வதற்கு அனுமதி கேட்டபோது தாம் மறுத்ததாகவும் மேலும் குண்டசாலையில் சென்று படிப்பதற்கு விண்ணப்பம் செய்யவும் தடை செய்ததாகவும் குறிப்பிட்டார்.

இதுபற்றி விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

இவ்விளைஞன் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்துள்ளாரென்பதும் இதுவரையில் [illegible] (ஸ்கலர்ஷிப்பில்) மாதம் ரூ. 30 பெற்றுப் படித்துவந்தாரென்பதும் குறிப்பிடத்தக்கது.


S. R. S.
ஜவுளி மாளிகையில்
6 யார், 7 யார் கைத்தறிச் சேலைகள், 100-ம் நம்பர் 120-ம்பர் நூல்களால் எங்கள் சொந்த தறிகளில் தயார் செய்யப்பட்ட நித்தபாவனைக்குகந்த சேலைகள் விற்பனைக்குத் தயாராகவிருக்கிறது.
எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.


## அடைவு நகை

### ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 222-ம் இலக்கக் கடையில் கந்தையா பரமு அவர்களிடம் 1-6-61 தொடக்கம் 24-5-63 வரைக்கும்வைத்த அடைவுகளில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படாதவைகளையும் மீட்கப்படாதவைகளையும் 12-3-65 வெள்ளிக்கிழமை மூற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வீ. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.
643, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம் 17-2-65. 1621

கரவெட்டி
நுகவில் ஐக்கியஜோதி
பலநோக்குக் கூட்டுறவுச்
சங்கத்துக்கு

### மனேச்சர் தேவை

தராதரம்: i JSC சித்தியடைந்தவராக இருக்கவேண்டும்.
ii. கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராகஇருக்கவேண்டும்,
iii 22 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்
iv பிணை ரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூபா 3000/-

சம்பளம் மாதம் ரூபா 190/- பஞ்சப்படியுட்பட. 5-3-65 வரையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நியமனம் ஒருவருடத்துக்குத் தற்காலிகமானது.

அண்மையில் பெற்ற நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டுடன் காரியதரிசிக்கு விண்ணப்பஞ் செய்யவும்:

பி. அ. பிலிப்பையா,
காரியதரிசி
அ. லிகோரி
தலைவர்
17-2-65 1628

### வாடகைக்கு

அக்கராயன் குளத்தில் 'புல்டோஸர்' (Bull Dozer) வாடகைக்கு கிடைக்கும். சி. விவேகானந்தன், வல்வெட்டித் துறை. 1597

## எழுவைதீவு கிராமசபை

எழுவைதீவு, வியாழன்
எழுவைதீவு கிராமசபைத் தலைவர் தெரிவு உள்ளூராட்சி உதவியாணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. திரு. வைத்திலிங்கம் ஆறுமுகம் தலைவராகவும், திரு. சந்தியாப்பிள்ளை பர்ளுந்துப்பிள்ளை உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப்புதிய கிராமசபை நன்கு நடைபெற நேர்மை ஒற்றுமை விடாமுயற்சி வேண்டுமென்றும், தீவை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர உதவிக் கமிஷனரின் உதவி பெருமளவில் தேவையென்றும் தம்மால் இயன்றவரை ஊரின் முன்னேற்றத்துக்குத் தாம் உழைப்பதாகவும் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

''கோப்பாய் தெற்கு பழஞ்சந்தை ரேட்டுக்கு அருகாமையில் இருக்கும் 'ஆட்டுப்பட்டி' என்னும் எனது காணி 24 பரப்பையும் ஒருமித்தும், பிரித்தும் விற்கப்படும். சி. கனகசபாபதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் 1592

### தேவை

பனைவடலி மட்டைத்தும்பு, சுத்தம் செய்யப்பட்டது. வெள்ளை, கறுப்பு. அந்தர் விலைகுறித்து விண்ணப்பிக்கவும். A 2 / F 4, புளுமன்டல் மாடி, கொழும்பு 1583

சில்லறை விற்பனை நிலையத்திற்கு J. S. C. வகுப்புச் சித்தியடைந்த 20—35 வயதுக்குட்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கு நிர்வாகக் காரியதரிசி, வலி, வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தெல்லிப் பழை. 1593

தொலைபேசித் தொடர்பு கொள்வதற்கும் (Telephone Operator), உடைகளைப் பார்சல் செய்து கொடுப்பதற்குமாக 'சன்லைட் டையேர்ஸ் & றைகிளீனேர்ஸ் ஸ்தாபனத்துக்கு ஒருவர் தேவை. 18—21 வயதுள்ளவர் விரும்பத்தக்கது. பின்வரும் விலாசத்தில் 27-2-65 காலை 10 மணிக்கும் 2 மணிக்குமிடையில் சந்திக்கவும். சூரியப் பிரகாஸ் ஸ்டோர்ஸ், வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம். டெலிபோன்: 474, தந்தி: பெயின்ற். 1599

யாழ். அந்திய கால சேமலாப நிதிச்சங்கத்திலுள்ள வடமராட்சிப் பகுதிக்கு பிணைப் பணம் ரூபா நூறு கட்டக்கூடிய ஏஜென்டு தேவை 25-2-65க்கு முன் விண்ணப்பிக்கவும். கௌரவ காரியதரிசி மேற்படி சங்கம் 11 G மொம்சாக் மாளிகை, யாழ்ப்பாணம். 1598

### வைத்தியம்

கண்ணைப்பற்றிய வியாதிகளுக்கும் தலையிடி நாசியில் அடைப்பு, தும்மல் போன்ற அநேகம் வியாதிகளுக்குச் சிறந்தது. நயனவிதித் தைலம், கிடைக்கு இடம் மு, சுவாமிநாதர், வைத்தியசாலை, சுன்னுகம் P O. 1595

## மரண அறிவித்தல்

### இராமர் ஆழ்வாப்பிள்ளை

இராமர் ஆழ்வாப்பிள்ளை காலமானூர். இவர் ஆண்டி அம்பலம் அரசினர் வைத்தியசாலை அப்போதிக்கரி சுப்பிரமணியம், திருமதி சேதுப்பிள்ளை சரவணமுத்து கோப்பாய், கரவெட்டி நாகம்மா சிவசம்பு, ஆகியோரின் அருந்தவத் தந்தையும் ஆயுர்வேத டாக்டரான க. இராசவேலு (கரவெட்டி) M. B. B. S, வைத்திய மாணவரான க, இராமச்சந்திரராசா, மருதங்கடவல P W D இன்ஸ்பெக்டரின் மனைவியாகிய இந்திராவதி அம்மா பொன்னுத்துரை, செல்வி பரமேஸ்வரி அம்மா சுப்பிரமணியம், ஆயுர்வேத வைத்திய மாணவரான சு விக்னேஸ்வரா, செங்கட்டிக் குளம் அரசாங்க ஆசிரியரின் மனைவி திருமதி பவளம் நடராசா, முள்ளியவளை நெல் ஆலை உரிமையாளரின் மனைவியாகிய வள்ளியம்மை தம்பிஐயா, கரவெட்டி, குருபரலிங்கம் ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தனது சொந்த இல்லமான கரவெட்டி கிழக்கு க்ஷத்திரியவாசத்தில் இருந்து வீரக்களி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இ. ஆ. சுப்பிரமணியம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. 1600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 300 மாத உதவி வழங்கப்பட வேண்டும்

## உயிரிழந்த கடற்தொழிலாளர் பற்றி பட்டினசபை உபதலைவர்

காங்கேசன்துறை, வியா.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளரை தற்போதைய அரசாங்கம்வஞ்சம் தீர்ப்பதாக காங்கேசன் துறைப் பட்டினசபை உபதலைவர் திரு. வி. இரத்தினராசா கடற்தொழில்மந்திரிக்கும்சமூக சேவைப்பகுதிக்கும் அரசாங்க அதிபருக்கும் புகார் தெரிவித்துள்ளார்.

"காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் மயிலிட்டிக் கிராமத்தில் மொத்தம் சூறாவளியினால் உயிரிழந்தவர்கள் தொகை 68 பேர். அதோடு அவர்களுக்குச் சொந்தமான இயந்திரபடகுகள்நைலோன் வலைகள் மற்றும் உபகரணங்களையும் இழந்துவிட்டனர். இவர்கள் இழந்த ஒரு இயந்திரப் படகும் அதன் உபகரணங்களின் பெறுமதியும் ரூபா 28000-00. ஆனால் இவ்விதம் கஷ்டமடைந்துள்ளவர்களுக்கு அரசாங்கம் 20 ரூபா மட்டும்தான் நிவாரண உதவியாக வழங்கி உதவி இருக்கிறது. இன்று உண்மையில் எமது கிராமத்து மக்கள் அன்றாட உணவுக்கே வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

எஞ்சியிருக்கும் கடற்தொழிலாளர்கள் நைலோன் வலைகள் பெறமுடியாமல் தொழிலைச் செய்ய இயலாமல் கஷ்டப்படுகின்றனர். காரணம் தனிப்பட்ட முதலாளிகள் ஒரு நைலோன் வலைக்கு ரூபா 100 அதிகலாபம் வைத்து விற்கின்றனர். யூனியன்களில் வலைகள் கொடுக்கப்படுவதில்லை. அத்தோடு அவர்கள் தொழிலைச் செய்வதற்கு இயந்திரப்படகுகளும் இல்லை. இந்தச் சூழ்நிலையை அரசாங்கம் கவனிக்காமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும்.

அரசாங்கம் உடனடியாக தொழில் செய்வதற்கு இயந்திரப்படகுகளையும் வலைகளையும் கொடுத்து உதவ வேண்டும். அரசாங்கம் தற்பொழுது இயந்திரப் படகுகளையும் அதற்கு வேண்டிய உபகரணங்களையும் கொடுத்து கடற்தொழிலாளரை மாதச்சம்பளத்திற்கு வைத்திருக்க நடவடிக்கை எடுப்பதாக ஒரு வதந்தி அடிபடுகிறது. இது உண்மையாயின் அப்படிச்செய்வது அரசாங்கத்திற்கும் கடற்தொழிலாளருக்கும் கஷ்டம். ஏனெனில் கடலில் சென்று மீன்பிடிப்பது மிகவும் கஷ்டமானதும் ஆபத்தானதுமாகும். எனவே அவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு 300 ரூபாவுக்குமேல் சம்பளம் கொடுக்க வேண்டும். இன்றேல் இத்தொழிலைச் செய்வது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

சிங்கள பரீட்சை

### சரிபாதிப்பேரே தேர்ச்சியுற்றனர்

பம்பலப்பிட்டி, வியாழன்

அரசாங்கத்தால் நடத்தப்பட்டுவரும் சிங்கள தகுதிப் பரீட்சையில் கடந்த 7 வருடங்களில் தோற்றிய 1,55,000 அரசாங்க சேவை ஊழியர்களில் 78,000 பேரே சித்தியடைந்துள்ளனர்.

அரசாங்க சேவையில் அரசகருமமொழி அமுல் சம்பந்தமாக நீதி அமைச்சினால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெட்ரோல் நிலையம் இடிந்து விழுந்தது

பருத்தித்துறை, வியாழன்

இங்கு இரு தினங்களாகத் தொடர்ந்து பெய்த பெருமழை காரணமாக மந்திகைச் சந்தியில் உள்ள பெற்ரோல் விற்பனை நிலையத்தின் முன் பகுதி முற்றாக இடிந்துவீழ்ந்து விட்டது. இதனால் பல்லாயிரம் ரூபா நஷ்டமேற்பட்டதாகக் கூறப்படுகிறது.

---

### கண்டி கோஷ்டி இன்று வருகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

கண்டி சென்ற் சில்வெஸ்ரர் கல்லூரியினர் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்யவிருக்கிறார்கள். இங்கு யாழ் மத்திய கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி ஆகியவைகளுடன் விளையாடுமெனத் தெரிகிறது. 19 20ந் தேதிகளில் யாழ். மத்திய கல்லூரியுடன் மத்திய கல்லூரி மைதானத்தில் விளையாடுவார்கள்.

வார்கள்: 23, 24-ம் தேதிகளில் ஹாட்லிக் கல்லூரியுடன் பருத்தித்துறையில் விளையாடுவார்கள்.

---

### ஹாக்கிப் போட்டியில் கடற்படைவீரர் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் ஹாக்கிச்சங்கம் நடத்தும் சுற்றுப்போட்டியில்கடந்த செவ்வாய்க்கிழமை யாழ் கோட்டைமைதானத்தில் கடற்படையினருக்கும் யாழ். மத்தியகல்லூரியினருக்குமிடையே நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் கடற்படையினர் 4-2 கோல்களால் வெற்றியீட்டினர்.

இடைவேளையின்போது இரு பகுதியினரும் தலா ஒவ்வொரு கோல் போட்டனர். கடற்படையினர் சார்பில் ஜெகநாதனும் மத்திய கல்லூரியினர் சார்பில் காந்தனும் தலா ஒவ்வொரு கோல் போட்டனர். இடைவேளையின் பின் கடற்படையினர் 3 கோல்களும் யாழ். மத்திய கல்லூரியினர் ஒரு கோலும் போட்டு கடற்படையினர் 4-2 கோல்களால் வெற்றியீட்டினர். திரு. கே. பூபாலசிங்கம், சார்ஜன்ட் மேஜர் பக்கீர் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

---

### தியாகிகளுக்கு அஞ்சலி

சாவகச்சேரி, வியாழன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரிக் கிளைக் கூட்டம் இன்று காலை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் தமிழ் நாட்டில் நடைபெற்ற மொழிக்கிளர்ச்சியின் போது உயிரிழந்த தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இன்று காலை திரு. சர் வேலவரன் தலைமையில் கூடிய தென்மராட்சி இளந்தமிழர் மன்ற நுணுவில் கிளைக்கூட்டத்திலும் இதுபோன்ற அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### 'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதி

'ஈழநாடு' சூறாவளிக் கஷ்ட நிவாரண நிதிக்கு பணமாகவும் பொருளாகவும் 25,890 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் கிடைத்த வசூல் விபரம் வருமாறு:-

ஏ. தியாகராசா, யாழ்ப்பாணம். 15-00

---

### நியமனம்

கொழும்பு, வியாழன்

ஒலிபரப்பு தகவல் பகுதியின் டைரக்டர் ஜெனரலாக திரு. லிலங்கா விஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

---

### கலைப் பட்டதாரிக்கு வேலை வாய்ப்பு

பம்பலப்பிட்டி, வியாழன்

தமிழைப் போதனா மொழியாகக் கொண்டுள்ள அரசாங்க பாடசாலைகளில் போதிப்பதற்கென கலைப்பகுதி பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கின்றனர்.

இதற்கென 600 காலிஸ்தானங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அடுத்த திங்கட்கிழமைக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி மந்திரியின் சிபார்சின் பேரிலேயே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

---

### 'களனி சம்பவத்தை விசாரணை செய்க'

பிரதமரிடம் கோரிக்கை

பம்பலப்பிட்டி, வியாழன்

சென்ற வியாழக்கிழமை களனி புகையிரத நிலையத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க சேவைச் சங்கம் பிரதமரைக் கோரியுள்ளது.

மேற்படி சம்பவத்தின்போது ஸ்தலத்திலேயே இருவர் மாண்டனர், பலர் காயமடைந்தனர், ஒரு கான்ஸ்டபிளும், புகையிரதத் தொழிலாளியும், பிரயாணி ஒருவரும் கொழும்பு ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

---

### இன்று

ஸ்ரீ யோகர் சுவாமிகளின் நினைவாக திரு வை. கல்லையா, மாவிட்டபுரம் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவிலில 'ஸ்ரீசோமாசிமாற நாயனார்' என்னும் பொருள்பற்றி இன்றுமாலை 6-30 மணியளவில் உபந்நியாசம் செய்வார்.

# 'காயமடைந்தவர் எனது காரில் வாந்தி யெடுக்கவில்லை'

## நல்லூர் கொலை முயற்சி வழக்கில் புரக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்

நல்லூர் கொலைமுயற்சி வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நல்லூரைச் சேர்ந்த கந்தையா நடராசா என்பவரை 63-ம் ஆண்டு மே மாதம் 4 ந் திகதி தெய்வேந்திரன், துரைசிங்கம், கந்தசாமி, நவரத்தினம், ஆகியோர் கத்தியால் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், அதே இடத்தில் அதேநேரத்தில் நடராசாவின் 150 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தைக் கொள்ளையடித்ததாகவும், அதே இடத்தில், அதே நேரத்தில் கைக்கடிகாரத்தை கொள்ளையடிக்கும்போது நடராசாவிற்கு காயம் ஏற்படுத்தியதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு கே வி எஸ் சண்முகநாதன், திரு கோபாலரத்தினத்தின் உதவியுடனும் திருவாளர்கள் பாலக்குமார், விஸ்வநாதன் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

புரக்டர் சாட்சியம்

திரு ஙி. குணரத்தினம் சாட்சியமளித்தபோது தொடர்ந்து கூறியதாவது:- நான் சம்பவம் நடந்ததினம் உடுப்பிட்டியிலிருந்து அச்சுவேலிக்கு காரில் சென்று கொண்டிருந்தேன். உடுப்பிட்டியிலிருந்து 100 யாருக்கு அப்பால் ஒருவர் ரோட்டில் படுத்திருந்தார். நான் காரை மறித்தேன். அவரின் உடம்பிலுள்ள காயங்களிலிருந்து இரத்தம் வடிந்தோடிக்கொண்டிருந்தது. நான் அவருடன் கதைக்குமுன் அவர் தன்னை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லுமாறு கூறினர். காயமடைந்தவர் காரில் வாந்தி எடுக்கவில்லை. யார் வெட்டினார்கள் என்று கேட்டேன், நல்லூரைச் சேர்ந்த கந்தசாமியும், உரும்பிராயைச் சேர்ந்த துரைசிங்கமும், தெய்வேந்திரமும் வெட்டினார்கள் என்று கூறினர். நான் அவரை காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குவிரைந்து சென்றேன். அவருடைய தகப்பனரைப்பற்றி விசாரித்தபோது தனது தகப்பனர் 'சென்ற். வியாபாரம் செய்வதாகக் கூறினர்' யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அவரை அனுமதித்து விட்டு, ஆஸ்பத்திரி பொலிஸாரிடம் உடனடியாக வாக்குமூலமளித்தேன்.

டாக்டர் ஏ வைத்திலிங்கம் சாட்சியமளித்த பின்னர் இன்று காலை 9-15 வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

### மல்லி தட்டுப்பாடு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு இலாகா அதிகாரிகள் அறிவித்தனர்.

பதுக்கல் பேர்வழிகள் முன்பு கோதுமையைப் பதுக்கியதுபோல் மல்லியிலும்பதுக்கலை மேற்கொள்வதே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டது.

உணவிலாகா இனி இவ்வித பதுக்கல்மீது கடும் நடவடிக்கை எடுக்கும் என அறிவிக்கப்பட்டது.

---

### சண்முகதாசன்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளன பொதுச் செயலாளர் திரு. நா. சண்முகதாசனுக்கு காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை தொழிலாளர்கள் நாளை ஒரு வரவேற்பு அளிப்பார்கள். இதையொட்டி காங்கேசன் சிமெந்து ஐக்கிய தொழிலாளர் யூனியனின் ஆதரவில் நாளை மாலை இரட்டைக் குடிசை மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

### மொழிப்பிரச்னைமீது....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் நடைபெறவேண்டும். பார்லிமெண்டில் தத்தம் தாய் மொழிகளில் உறுப்பினர்கள் பேசுவதற்கு ஒழுங்குகள் செய்துகொடுக்கப்பட வேண்டும்" என்றும் திரு. முகர்ஜி சில யோசனைகளை வெளியிட்டார்.

"ஹிந்தி ஆட்சி மொழி ஆகாது"

தி. மு. கழக உறுப்பினர் திரு. கே. மனோகரன் பேசுகையில், ஹிந்தியை ஒருபொழுதும் இந்தியாவின் ஆட்சி மொழியாக்க முடியாது என்றும் தமிழ்நாடு அரசாங்கம் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டுவிட்டதென்றும் கூறினார்.

தமிழ்நாட்டுன் பல பகுதிகளிலும் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகம், மற்றும் அசம்பாவித நிகழ்ச்சிகளுக்கெல்லாம் தமிழ்நாட்டு அரசாங்கமே பொறுப்பு என்றும் திரு. மனோகரன் பேசினர்.

மூன்றரை மணி நேர விவாதம்

மூன்றரை மணி நேரம் வரை நடைபெற்ற இந்த விவாதத்தில் 13 அங்கத்தவர்கள் காரசாரமாக உரை நிகழ்த்தினர். இறுதியாக நடைபெற்ற வாக்கெடுப்பில் இப்பிரேரணையை ஆதரித்து 39 பேரும், எதிர்த்து 196 பேரும் வாக்களித்திருந்தனர்.

தமிழ்நாட்டுக்கு நந்தா பாராட்டு

உள்துறை மந்திரி திரு. நந்தா பேசுகையில், நாட்டின் எப்பகுதி மக்களுக்கும் அரசாங்கம் பாரபட்சம் காட்டாது என்றும் சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்ட அரசாங்கம் தவறமாட்டாது என்றும் இந்த வகையில் தாம் தமிழ்நாட்டு அரசாங்கத்தை பாராட்டுவதாகவும் கூறினர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# திருக்கேதீச்சரத்தில் மகாசிவராத்திரி

## விசேஷ ஏற்பாடுகள்

திருக்கேதீச்சரம், வியாழன்

திருக்கேதீச்சர ஆலயத்தில் அடுத்த மாதம் முதலாந் திகதி (1-3-65) சிவராத்திரி விழாவை கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை திருக்கேதீச்சர திருப்பணிச்சபையார் மிகவும் துரிமாகக் கவனித்து வருகின்றனர்.

அண்மையில் வீசிய சூறாவளியால் ஆலயமும், புதிதாகக் கட்டப்பட்ட வசந்தமண்டபமும் வேறு சில கட்டடங்களும் மிகுந்த சேதத்திற்குள்ளாகியது. இதை மீண்டும் திருத்தும் வேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்றுவருகிறது. மற்றும் அடியார்களுக்குத் தங்குவதற்கான வசதியுடன் விசேஷ பஸ் வசதி மற்றும் பல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. சிவராத்திரி அன்று நடக்கும் நிகழ்ச்சிகளை [illegible] ஒலிபரப்பு அஞ்சல் செய்வதற்கான ஒழுங்குகளையும் கவனித்துவருகின்றனர்.

மஹாசிவராத்திரித் தினத்தன்று கௌரி சமேதகேதீச்சர நாதருக்கு விசேஷ பூசை அபிஷேகங்கள் நான்கு சாமங்களிலும் நடைபெறும்.

ஆலயத்தில் அன்றிரவுமுழுவதும் சைவப்பிரசங்கம்; கதாகாலக்ஷேபம், சங்கீதக் கச்சேரி, தோத்திரப்பாராயணம், புராணபடனம் இவை யாவும் வழக்கம்போல் இடம்பெறவிருக்கின்றன.

மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் சுவாமிஅம்பாள் வீதிவலம் புறப்பட்டுப் பாலாவியில் தீர்த்தமாடி பின் ஆலயம் சென்றடைவார்கள்.

ஆலயத்தில் அடியார்கள் சிவதீட்சைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிவராத்திரித் தினத்தன்றும் தீர்த்தத்தினத்தன்றும் அடியாருக்கு அன்னதானம் வழங்கப்படவிருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org